www.freetnbooks.com

# இரண்டாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு – 2025

## ஆறாம் வகுப்பு

பதிவு எண் :

**நேரம்: 2.00 மணி** **அறிவியல்** **மதிப்பெண்கள்:60**

பகுதி – I

10x1=10

**I சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. வெப்பத்தின் அலகு
அ) நியூட்டன் ஆ) ஜூல் இ) வோல்ட் ஈ) செல்சியஸ்
2. வேதி ஆற்றலை மின்னாற்றலாக மாற்றும் சாதனம்
அ) மின் விசிறி ஆ) சூரிய மின்கலன் இ) மின்கலன் ஈ) தொலைக்காட்சி
3. கீழ்க்கண்டவற்றுள் எது நற்கடத்தி ?
அ) வெள்ளி ஆ) மரம் இ) அழிப்பான் ஈ) நெகிழி
4. காற்றில் நைட்ரஜனின் சதவீதம் ________
அ) 78% ஆ) 21% இ) 0.03% ஈ) 1%
5. தாவரங்களில் வாயுப் பரிமாற்றம் நடைபெறும் இடம் ________ ஆகும்.
அ) இலைத்துளை ஆ) பச்சையம் இ) இலைகள் ஈ) மலர்கள்.
6. யூகேரியோட்டின் கட்டுப்பாட்டு மையம் எனப்படுவது
அ) செல் சுவர் ஆ) நியூக்ளியஸ் இ) நுண்குமிழ்கள் ஈ) பசுங்கணிகம்
7. கீழே உள்ளவற்றில் எது ஒரு செல் உயிரினம் அல்ல ?
அ) ஈஸ்ட் ஆ) அமீபா இ) ஸ்பைரோகைரா ஈ) பாக்டீரியா
8. மனிதனின் முதன்மையான சுவாச உறுப்பு.
அ) இரைப்பை ஆ) மண்ணீரல் இ) இதயம் ஈ) நுரையீரல்
9. மனிதனின் இரத்த ஓட்ட மண்டலம் கடத்தும் பொருள்கள் ________
அ) ஆக்சிஜன் ஆ) சத்துப்பொருள்கள் இ) ஹார்மோன்கள் ஈ) இவை அனைத்தும்
10. உள்ளீட்டுக்கருவி அல்லாதது எது ?
அ) சுட்டி ஆ) விசைப்பலகை இ) ஒலிபெருக்கி ஈ) விரலி

5x1=5

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. பொருளின் சூடான நிலையானது ________ கொண்டு கணக்கிடப்படுகிறது.
12. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்கலன்களின் தொகுப்பு ________ ஆகும்.
13. காற்றில் காணப்படும் எளிதில் வினைபுரியக் கூடிய பகுதி ________ ஆகும்.
14. செல் என்ற வார்த்தையை உருவாக்கியவர் ________
15. மனித உடலிலுள்ள கழிவுப் பொருட்களை வெளியேற்றும் முறைக்கு ________ என்று பெயர்.

5x1=5

**III பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 16. காது | – | இதயத் தசை |
| 17. எலும்பு மண்டலம் | – | தட்டையான தசை |
| 18. உதர விதானம் | – | ஒலி |
| 19. இதயம் | – | நுண் காற்றுப்பைகள் |
| 20. நுரையீரல்கள் | – | உள்ளுறுப்புக்களைப் பாதுகாக்கின்றது |

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with CamScanner

www.freetnbooks.com



## பகுதி – II

**IV குறுகிய விடையளி. (ஏதேனும் பத்து)** 10x2=20

21. வெப்பநிலை என்றால் என்ன?
22. ஒப்புமை தருக.
 அ) வெப்பம் : ஜூல் : வெப்பநிலை : ________
 ஆ) பனிக்கட்டி : 0°C : கொதி நீர் : ________
23. டார்ச் விளக்கில் எவ்வகையான மின்சுற்று பயன்படுத்தப்படுகிறது?
24. தொடரிணைப்பு ஒன்றிற்கு மின்சுற்றுப் படம் வரையவும்.
25. சரியா (அ) தவறா எனக் கூறுக.
 அ) தீக்குச்சி எரிவது ஒரு மீள் மாற்றம்.
 ஆ) உணவு செரித்தல் என்பது ஓர் இயற்பியல் மாற்றம்.
26. கரைசல் என்றால் என்ன?
27. வளிமண்டலம் என்றால் என்ன?
28. பணியிலுள்ள போக்குவரத்துக் காவலர் முகமூடி அணிவதேன்?
29. செல்லின் முக்கிய உட்கூறுகள் யாவை?
30. யூகேரியாட்டிக் செல்லிற்கு மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.
31. முக்கியமான ஐந்து உணர் உறுப்புகளின் பெயர்களை எழுதுக.
32. கீழுள்ளவற்றை முறைபடுத்தி எழுதுக:
 சிறுநீர்ப் புறவழி → சிறுநீர் நாளம் → சிறுநீர்ப்பை → சிறுநீரகம்
33. கணினியின் கூறுகள் யாவை?

## பகுதி – III

**V விரிவான விடையளி. (எவையேனும் நான்கு)** 4x5=20

34. வெப்ப விரிவடைதலைத் தகுந்த உதாரணங்களுடன் விளக்குக.
35. மின் சுற்றுகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மின்சாதனங்களின் பெயர்களையும் அவற்றின் குறியீடுகளையும் பட்டியலிடுக.
36. உன்னைச் சுற்றி நடக்கும் மாற்றங்களிலிருந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மாற்றத்திற்கும் தகுந்த எடுத்துக்காட்டு தருக.
 அ) மெதுவான / வேகமான மாற்றம்
 ஆ) மீள் / மீளா மாற்றம்
 இ) இயற்பியல் / வேதியியல் மாற்றம்
 ஈ) இயற்கையான / செயற்கையான அல்லது மனிதனால் நிகழ்த்தப்பட்ட மாற்றம்
 உ) விரும்பத்தக்க / விரும்பத்தகாத மாற்றம்
37. பூமியில் உயிரினங்கள் வாழ வளிமண்டலம் ஏன் தேவைப்படுகிறது?
38. புரோகேரியாட்டிக் செல்லின் படம் வரைந்து பாகங்களைக் குறி.
39. நாளமில்லா சுரப்பி மண்டலம் மற்றும் நரம்பு மண்டலத்தின் பணிகளை பட்டியலிடுக.

***/***

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with CamScanner